

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும்,
நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் உயர்திரு. ஆறுமுகம் கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

05.02.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப்
பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

# ஆறுமுகம் கனகரத்தினம்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

**அவர்களின் சிவபதப்பேறு குறித்த**

# நினைவு மலர்

**05.02.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கி

அன்போடும், பாசத்தோடும், பண்போடும்

பேணிப் பாதுகாத்து இன்று வானுறையும்

தெய்வத்துள் அமர்ந்து விட்ட

எமது அன்புத் தெய்வம்

அமரர் திரு. ஆறுமுகம் கனகரத்தினம்

அவர்களின் திருப்பாதத்தில் சூடித் தாங்கள்

விண்ணுலக வாழ்வு வளம் பெறவேண்டி

இம்மலரினைக் காணிக்கையாகச்

சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு :
17.02.1924

அமரர்

உதிர்வு :
07.01.2009

# உயர்திரு. ஆறுமுகம் கனகரத்தினம்

[ இளைப்பாறிய ஆசிரியர் ]

சீர் பெருகு சர்வதாரி வருஷ மார்கழித் திங்கள்
கார்த்திகை கூடிட சுவர்க்கவாயில் ஏகாதசி நன்நாளில்
சீர்மிகு செம்மல் ஆறுமுகம் கனகரத்தினம்
பார்தனைப் பிரிந்து தேறிடத்தான் தேர்ந்தான் காண் உயர்பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

### பிள்ளையார் துதி

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க்
காட்செய்மின் குழாம் புகுந்து
தண்ணங்கடந்த பொருளள விலதோ
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற்கரியவன்
நிலவு லாவிய நிர்மலி வேணியன்
அழகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாழ்சற் - குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குனனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் உயர்திரு. ஆறுமுகம் கனகரத்தினம்

அவர்கள்

# வாழ்க்கைப் பாதையில் .......

# பதித்த சுவடுகள் ........

இந்து சமுத்திரத்தின் இலங்கிடு முத்தென்று வந்தோர் வாழ்த்திய இலங்கைதனில் வண்ணத்தாமரை வதனமாம் வடபால், கற்பக தருவும் தலையாட்டி வரவேற்க, கற்றவர் பலரும் கற்பனைத் திறனில் வாழ்த்திப் பாடிட, ஆலய மணிகள் அசைந்தே ஒலித்திட அருள்மிகு தெய்வங்கள் அருள்தனைச் சொரியும் வண்ண ஊராம் வண்ணார்பண்ணை தனில் உயர்சைவ வேளாளர் குலத்தில் வழிவந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகத்துக்கும் நாகம்மாவுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவரே ஆறுமுகம் கனகரத்தினம் எனும் நன்மகனாவார்.

வேய்குழல் இசைக்கும் பூங்குயில் மகிழ்வுடன் மாவினில் இருந்து கானம் இசைத்திடும் சுதுமலையில் வாழ்ந்த அருங்குண ஆறுமுகம் தன் வாழ்க்கைத் துணையாய் வயல்சேர் மருதம் அணி செய்திடும் மானிப்பாய் எனும் மணியான பதியில் வாரித்தம்பி தம்பதியினர் பெற்றெடுத்த நற்குண மங்கையாம் நாகம்மாவினை துணையாய் கண்டு இல்லறவாழ்வில் நல்லறமாக மூத்த மகனாய் இராசரத்தினத்தையும், அவருக்குத் துணையாய் கனகரத்தினத்தையும், இவர்களுடன் பரிமளம், நாகரத்தினம், செல்லம்மாவையும் சகோதரிகளாகக் கண்டு களிப்புற்று, சிறிய தாயாரின் பிள்ளைச் செல்வங்களான கதிர்காமநாதன், பாலசுப்பிரமணியம் இருவரையும் உடன் பிறவாச் சகோதரங்களாகக் கண்டு மகிழ்வுற்றார்.

மகிழ்வுறு வாழ்க்கையில் கல்வியின் தேவை அறிந்து ஆரம்பக் கல்விதனை யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு யாழ்/ சன்மார்க்க துவிபாஷா பாடசாலையில் கற்று, கற்ற கல்வியின் பயனாய் ஆசிரியத் தொழிலை ஏற்று, ஏற்ற தொழிலை தெய்வமாக மதித்து திறம்படச் செயல்பட்டார். தன் தொழிலை மேன்நிலைப் படுத்த எண்ணி திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரிய சேவையில் சிறப்புப் பெற்றார்.

இவரது வாழ்வு சிறக்க இல்வாழ்வில் இணைக்க விரும்பிய பெற்றோர் நற்குண நங்கையைத் தேடிய வேளை, ஒன்பது ஆலயங்கள் சூழவும், தங்கத்தாத்தாவாம் சோமசுந்தரப் புலவர் பிறந்து புகழ் பூத்த நவாலி எனும் ஊரில் வடபகுதியில் முதலியார் வழித்தோன்றல் அப்புத்துரை, தையல்நாயகி தம்பதியினரின் மூத்த மகளான ஆசிரியை கடம்பேஸ்வரியைத் தேர்ந்தெடுத்து மணம் முடித்து வைத்தனர். கைப்பிடித்த மங்கையின் உறவால் பாஸ்கரன், ரகுநாதன் ஆகியோரை மைத்துனராகக் கண்டு களிப்புற்று வாழ்ந்தார். தம்பதிகளின் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டிருந்தமையால் புரிந்துணர்வுடன் வாழ்வைச் சந்தோஷமாக முன்னோக்கிக் கொண்டு செல்ல உறுதுணையாக பிள்ளைச் செல்வமாக வானதியை மூத்த மகளாகப் பெற்று கல்வி அறிவூட்டி அதன் பயனாக தந்தை, தாய் மேற்கொண்ட ஆசிரியத் தொழிலையே தானும் செய்ய விரும்பி யா/ மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் ஆசிரியையாகக் கடமை செய்ய, இவருடன் சகோதரர்களாக ஜெயதேவன், சிவகுமாரன், அரவிந்தன் ஆகிய மூன்று முத்தான மகன்களைப் பெற்று அவர்களுக்குச் சிறப்பாக கல்வி புகட்டி, பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய தொழில்துறையில் ஈடுபடச் செய்தார். தன் பிள்ளைகளுடன் பெறா மகனான சுந்தரகுமாரையும் அரவணைத்து அன்புகாட்டி மகிழ்ந்தார்.

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களுடன் நல் உறவைப் பேணியதுடன் இறை பணி செய்வதில் தனது நேரத்தைச் செலவு செய்தார். தினமும் இறை சிந்தனை, தியானம், தெய்வ சந்நிதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயம் செய்தல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டார். இக்கால கட்டத்தில் மூத்தமகன் ஜெயதேவனின் வாழ்வில் வசந்தம் மலர வசந்தியெனும் நற்குண நல்மங்கையை திருமணம் செய்து இவர்கள் மூலமாக ஆதித்தன், அஸ்வினி ஆகிய இரு பேரக்குழந்தைகளைக் கண்டு இன்புற்றார். மனிதவாழ்வில் மற்றவர்கள் போற்றும் விதத்தில் சிறப்பான தொழில், நல் மனைவி, நற்குண மக்கள், பேரக் குழந்தைகள் என கண்டு மனம் மகிழ்வில் களிப்புற, மனஅமைதி வேண்டி இறைபக்தியில் நாட்டம் கொண்டார். சிறந்த இறைபக்தி கொண்ட இவரின் வார்த்தைகளில் எந்நேரமும் இறைவனின் நாமமே வெளிவருவதைக் காணலாம். பொறுமையும் நேர்மையும் கொண்ட மனிதனாக வாழ்ந்த இவர் தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்தார். பிறருக்கு உதவி செய்வதில் முன்நிற்பார். ஆசிரிய சேவைக்காலத்தில் தனது சேவையை தொழிலுக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தார். வயதான காலத்தில் இறைவன் மீது அன்பு கொண்டு தேவாரம், திருவாசகம் என்பவற்றை பக்தி சுரக்க பாடி இன்புற்றார். "ஓம் நமசிவாய" என்ற நாமம் இவரது நாவில் ஒலித்துக் கொண்டிருந்த பலனாய் இறப்பிலேயே சிறந்த இறப்பு என சான்றோர் கூறிடும் சுவர்க்கவாயில் ஏகாதசியில் இவரது உயிரை இறைவன் எடுத்துக் கொண்டார். இவர் மரணமான நாளே இவரது வாழ்வின் நற்குண, நற்செயல்களுக்கு எடுத்துக்காட்டு எனலாம். சர்வதாரி வருஷம் மார்கழி மாதம் கார்த்திகை கூடிய சுவர்க்கவாயில் ஏகாதசி நன்நாளில் தனது பூவுல வாழ்வை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்தார்.

"எண்ணத்தில் தீமைதனை எண்ணாது வாழ்பவர்கள்
உள்ளத்தில் நன்மைதனை உறங்காது ஆள்பவர்கள்
எப்போதும் வாழ்வார்கள் நற்பேறும் பெறுவார்கள்"

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் அருளாளர்

நீர் வளமும், நில வளமும் ஒருங்கே அமைந்த ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வண்ணார் பண்ணை எனும் ஊரில் அவதரித்த பேரறிவாளன் அமரர் திரு. ஆறுமுகம் கனகரட்ணம் அவர்கள் நவாலி எனும் ஊரில் திருமண வாழ்வெய்தி வாழ்ந்து வரும் நல்நாளில் நாச்சிமார் முருகன் ஆலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியமை ஊர் மக்கள் மத்தியில் வற்றாத நீர் ஆக உள்ளது.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே" என்று உலகமெல்லாம் வாழ வேண்டுமென விரும்பிக் கேட்கின்ற ஞானசம்பந்தப் பெருமான் தான் தனியாக வாழ வேண்டுமென்று சொல்லவில்லை. உலகம் எல்லாம் வாழவேண்டுமென்று விரும்புகிற உள்ளமே பெரியவர்களுடைய உள்ளம். அத்தகைய ஓர் உள்ளம் படைத்த மாமனிதர்தான் புத்திஜீவியாகிய அமரர் திரு. அ. கனகரட்ணம் அவர்கள்.

நாச்சிமார் முருகன் ஆலயத்தில் ஒரு காலகட்டத்தில் அழியும் தறுவாயிலும் நித்திய பூசைகள் காலக்கிரமத்தில் நடைபெறாமை போன்றவற்றையும் கண்ணுற்ற ஒரு சில பெரியார்களின் அருள்நோக்கால் மீண்டும் புதுப்பொலிவு பெறும் வாய்ப்பைப் பெற்றது. அக்காலகட்டத்தில் புனருத்தாரண சபைத்தலைவரின் வலக்கரமாக விளங்கி ஆலயம் பொலிவும் வனப்பும் பெறவும் நித்திய நைமித்திய பூசைகளின் ஒழுங்கமைப்பைப் பேணவும் முன்னின்று உழைத்த அருளாளர். இவரின் சேவை மகத்தான ஒரு சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்வாக சபையின் செயலாளராகத் தொடர்ந்து பல வருடகாலம் பணிபுரிந்து ஆலய வளர்ச்சிக்கும் அடியார் பக்திப் பெருக்கிற்கும் வித்திட்ட பெருமகனார். ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் சுமங்கலிப் பூசையின் மகத்துவத்தை சுற்றாடலில் வாழ் பெண்ணினத்திற்கு மிகவும் வினயமாக எடுத்துக்கூறி சுமங்கலிப் பூசையில் பெண்ணினம் பங்கு கொண்டு இறையருள் பெற தம்மால் ஆன முயற்சிகள் பல புரிந்த அருள் நோக்குடையவர். ஆலயத்திற்கு வரும் அடியார்களோடு அவர் பழகும் விதம் "சகல ஜீவதயாபரன்", "கருணாமூர்த்தி" என்றெல்லாம் நாம் வாயாரப் புகழ்ந்துரைக்கும் இறைவனே மானிட வடிவில் வந்துள்ளாரா? எனச் சந்தேகிக்கும் அளவிற்கு இவ் அருளாளரின் இப்பண்பாளரின் தூயமனத்தை உடைய ஒழுக்க சீலரின் செயற்பாடுகள் அங்கு அமையப் பெறுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆலயத்திற்கு வருகைதரும் இளஞ்சிறார்களோடு அவர் பழகும் விதம் தனிரகமானது. அன்போடு அவர்களை அரவணைத்து நற்கதைகள் பல பேசித் தாமும் ஓர் குழந்தையாக அவ்விடத்திற் செயற்படும் விதம் பார்ப்போர் கவனத்தை ஈர்ப்பது மட்டுமல்ல அவரிடமிருந்து அன்பு என்பதன் அர்த்தம் என்ன என்பதை விளங்கிச் செயற்படும் அரியதோர் வாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பமும் அங்கு ஏற்படுவதாக அமைந்தது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் இவ் அருளாளர் இவ்வுலகை விட்டு ஏகாதசி நன்னாளில் விண்ணுலகைச் சென்றடைந்தமை எம்மவர்க்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். ஆயினும் கருணைக் கடலாம் கங்கைவார் சடையானின் திருப்பாதங்களைச் சென்றடைந்து இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தலைவர்

சி. சிவகுமார்

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய

தர்மகர்த்தா சபையினர் சார்பாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே. எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானாம் நாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாயெனைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய்யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

சிவபுராணம் முற்றிற்று.



## சகலகலாவல்லி மாலை

**திருச்சிற்றம்பலம்**

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழ மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கொன்டு கூடுங்கொ
ளோவுளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நாற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காய்யுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமை
கொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொரு
கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்
சகலகலாவல்லி மாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

## வருட முடிவுகளில் கொண்டாடப்படும் விழாக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் வருடம் நிறைவடையும் போது | | | - | காகித விழா |
| 2. | இரண்டு | " | " | " - | பருத்தி விழா |
| 3. | மூன்று | " | " | " - | தோல் விழா |
| 4. | நான்கு | " | " | " - | மலர் மற்றும் பழவிழா |
| 5. | ஐந்து | " | " | " - | மர விழா |
| 6. | ஆறு | " | " | " - | சர்க்கரை/ கற்கண்டு/ இருப்பு விழா |
| 7. | ஏழு | " | " | " - | கம்பளி/ செம்பு விழா |
| 8. | எட்டு | " | " | " - | வெண்கல விழா |
| 9. | ஒன்பது | " | " | " - | மணக்கலச விழா |
| 10. | பத்து | " | " | " - | தகரம் / அலுமினிய விழா |
| 11. | பதினொரு | " | " | " - | எஃகு விழா |
| 12. | பன்னிரெண்டு | " | " | " - | லினன் விழா |
| 13. | பதின்மூன்று | " | " | " - | பின்னல் விழா |
| 14. | பதினான்கு | " | " | " - | தந்த விழா |
| 15. | பதினைந்து | " | " | " - | படிக விழா |
| 16. | இருபது | " | " | " - | பீங்கான் விழா |
| 17. | இருபத்தைந்து | " | " | " - | வெள்ளி விழா |
| 18. | முப்பது | " | " | " - | முத்து விழா |
| 19. | நாற்பது | " | " | " - | மாணிக்கவிழா |
| 20. | ஐம்பது | " | " | " - | பொன்விழா |
| 21. | அறுபது | " | " | " - | வைர விழா |
| 22. | எழுபத்தைந்து | " | " | " - | பவளவிழா |
| 23. | நூறு | " | " | " - | நூற்றாண்டு விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்று வீசும் வேகத்தைப் பொறுத்து காற்றுக்குப் பெயர் இடப்படுவது வழக்கம் அதன் அடிப்படையில்

1. மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவது - மென்காற்று
2. மணிக்கு 6 - 11 " " " - இளம் தென்றல்
3. மணிக்கு 12 - 19 " " " - தென்றல்
4. மணிக்கு 20-29 " " " - புழுதிக்காற்று
   (புழுதியைக் கிளப்பி)
5. மணிக்கு 30-39 " " " - ஆடிக்காற்று
6. அதற்கு மேல் 100 கிலோமீற்றர் வரை வீசுவது - கடுங்காற்று
7. மணிக்கு 101-120 " " " - புயல்காற்று
8. மணிக்கு 120 கிலோ மீற்றருக்கு மேல் வீசுவது - சூறைக்காற்று

## நாடுகளின் தேசிய சின்னங்கள்

1. அவுஸ்திரேலியா - கங்காரு
2. இங்கிலாந்து - றோஜா
3. பிரான்ஸ் - அல்லி
4. இத்தாலி - வெள்ளை அல்லி
5. பாகிஸ்தான் - பிறை
6. ஸ்பெயின் - பருந்து
7. ஜப்பான் - கொத்துமலர்
8. கனடா - வெள்ளை அல்லி
9. அமெரிக்கா - தங்கக் கம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச ரீதியாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதாரண குறிகாட்டிகளும் போக்குவரத்துக் குறிகாட்டிகளும்

| | | |
|---|---|---|
| 1. | வெண்புறா | சமாதானம் |
| 2. | சிவப்பு முக்கோணம் | வளர்ச்சி |
| 3. | சிவப்புக்கொடி | ஆபத்து |
| 4. | மஞ்சள் கொடி | உலகதொழிலாளர்சங்கஅமைப்பு |
| 5. | மஞ்சள் விளக்கு | தொற்று நோய் |
| 6. | கையில் சட்டை கறுப்புத்துணி | துக்கம் |
| 7. | அரைக்கம்பத்தில் கொடி | இரங்கல் |
| 8. | தலை கீழான கொடி | துன்பம் |
| 9. | பச்சை விளக்கு | சாதன அனுமதி |
| 10. | தீப்பந்தம் | ஒலிம்பிக் |
| 11. | கண் கட்டப்பட்ட நிலையில் தராசு வைத்திருக்கும் பெண் | நீதி |
| 12. | எலும்பு நடுவில் மண்டையோடு | ஆபத்து |
| 13. | வெள்ளைக்கொடி | சமாதானம், பௌத்தர்களின் துக்கம் |
| 14. | உடைந்த கைவிலங்குடன் இருகைகள் | விடுதலை |
| 15. | மேல் நோக்கி செங்குத்தான கொடி | வெற்றி.ஆரம்பம் |
| 16. | சிவப்பு சக்கரம் | சமாதானம், அமைதி |
| 17. | சிவப்பு விளக்கு | குடும்பக்கட்டுப்பாடு |
| 18. | செஞ்சிலுவை | ஆயத்தம், தயார் நிலை |
| 19. | சுட்டு விரலும் நடுவிரலும் சேர்த்து V அடையாளம் | வெற்றி |
| 20. | பெருவிரல் சிறுவிரல் இரண்டையும் மடித்து மத்தியில் உள்ள மூன்று விரல்களையும் காட்டல் | சாரணர் இயக்க சத்தியப்பிரமாணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்டத்திலுள்ள வைத்திய மற்றும் ஏனைய நிறுவனங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1. | யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் | - 021 222 2262 |
| 2. | யாழ் போதனா வைத்தியசாலை | - 021 222 2261/2 |
| 3. | பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் | - 021 222 2278 |
| 4. | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | - 226 3261/226 3262 |
| 5. | மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை | - 060 221 2614 |
| 6. | மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி | - 021 222 8479 |
| 7. | மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை | - 226 3530 |
| 8. | மாவட் வைத்தியசாலை ஊர்காவற்றுறை | - 060 221 2660 |
| 9. | மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு | - 060 221 3577 |
| 10. | சுற்றயல் கூறு அச்சுவேலி | - 060 221 3584 |
| 11. | சுற்றயல் கூறு அச்சுவேலி | - 226 3152 |
| 12. | சுற்றயல் கூறு சங்கானை | - 021 222 5477 |
| 13. | சுற்றயல் கூறு காரைநகர் | - 021 222 5556 |
| 14. | சுற்றயல் கூறு நயினாதீவு | - 060 221 3583 |
| 15. | கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி | - 060 221 3580 |
| 16. | கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை | - 060 221 3582 |
| 17. | கிராமிய வைத்தியசாலை வேலணை | - 060 221 3570 |
| 18. | கிராமிய வைத்தியசாலை பண்டத்தரிப்பு | - 060 221 3585 |
| 19. | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெல்லிப்பளை | - 021 222 5557 |
| 20. | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்றுறை | - 060 221 3588 |
| 21. | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பருத்தித்துறை | - 226 4482 |
| 22. | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்ப்பாணம் | - 021 222 2645 |
| 23. | மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் பண்ணை யாழ்ப்பாணம் | - 021 222 2494 |
| 24. | புற்றுநோய் சிகிச்சை நிலையம் தெல்லிப்பளை | - 021 222 8478 |
| 25. | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | - 021 222 2561 |
| 26. | யாழ் வைத்தியசாலை | - 021 222 3348 |
| 27. | யாழ் மாநகரசபை | - 021 222 2275 |
| 28. | யாழ் மின்சாரசபை | - 021 222 2496 |
| 29. | யாழ் தீயணைப்புப் படை | - 021 222 3556 |
| 30. | யாழ் செயலகம் | - 021 222 2235 |
| 31. | யாழ் பொலிஸ் நிலையம் | - 021 222 2222 |
| 32. | யாழ் நீதிமன்றம் | - 021 222 2357 |
| 33. | யாழ் தபாலகம் | - 021 222 2250 |
| 34. | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் | - 021 222 2026 |
| 35. | சம்பந்தர் சிகிச்சை நிலையம் | - 021 222 7259 |
| 36. | போரூட் | - 021 222 2177 |
| 37. | உதயன் | - 021 222 9944 |
| | | - 021 222 9933 |
| | | - 021 222 3837 |
| 38. | வலம்புரி | - 021 222 3387 |
| 39. | தினக்குரல் | - 021 222 2127 |
| 40. | போக்குவரத்து சபை (கோண்டாவில்) | - 021 222 2207 |
| | | - 021 222 2280 |
| 41. | மனித உரிமை ஆணைக்குழு | - 021 222 2021 |
| 42. | மின்சாரசபை (சுன்னாகம்) | - 021 222 3001 |
| | | - 021 222 3002 |
| 43. | யாழ் அம்புலன்ஸ் | - 021 222 9792/222 2561 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்

எங்கள் குடும்பத்தலைவர்

திரு. ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களின்

மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள்

புரிந்த உறவினர்கள், நண்பர்கள்,

அயலவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து

கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி

வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையம்

சமர்ப்பித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளைத்

தொலைபேசி, தபால் மூலம்

தெரிவித்தவர்களுக்கும், மலரினை

வெளியிடுவதற்கு உதவி புரிந்தவர்களுக்கும்,

இம்மலரை அச்சிட்ட ரூபன் அச்சகத்தினருக்கும்

எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

*மனைவி, மக்கள்,*


*பெறாமகன், மருமக்கள்,*

*பேரப்பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org